# சிரார்த்த நியமங்கள்

## ஶ்ராத்த நியமா:

தொகுப்பு

வைதீககிரியாரத்னம்

மயிலணி

பிரம்மஸ்ரீ ச.சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள்

அமரர்

மயிலணி

பிரம்மஸ்ரீ சி.சர்வேஸ்வரக் குருக்கள் அவர்களின்

ஞாபகார்த்த வெளியீடு

விக்கிரம வருஷம் ஆவணி மாதம்

அச்சுப்பதிப்பு

சோதிடப்பிரகாச இயந்திரசாலை

கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரார்த்த நியமங்கள்

## ஶ்ராத்த நியமா:

தொகுப்பு

வைதீககிரியாரத்னம்

மயிலணி

**பிரம்மஸ்ரீ ச.சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள்**

அமரர்

மயிலணி

**பிரம்மஸ்ரீ சி.சர்வேஸ்வரக் குருக்கள் அவர்களின்**

**ஞாபகார்த்த வெளியீடு**

**விக்கிரம வருஷம் ஆவணி மாதம்**

அச்சுப்பதிப்பு

சோதிடப்பிரகாச இயந்திரசாலை

கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

பித்ரு என்ற சொல்லைக் கேட்டவுடனேயே சிலர் அதை அஶுபம் என எண்ணுவர் உபநயனம் விவாஹம் முதலாம் சுப கார்யங்களிலும் நாந்தி என்னும் பித்ரு பூஜையைச் செய்து பித்ருக்களின் ஆசிகளைப் பெறுகிறோம்.

பூலோக வாழ்க்கைக்கு பூதேவி, வருணன், அக்நி, வாயு, இந்திரன் எப்படி அவசியமோ அங்ஙனமே பித்ரு தேவர்களும் அவசியம்.

எட்டு வஸுக்கள், ஏகாதச ருத்ரர், த்வாதசாதித்யர் முதலியவர்களும் மற்றும் சிலரும் பித்ரு தேவர்களுக்காக படைக்கப்பட்டனர்.

நமது பெற்றோர் இறந்த பின் இவர்களது ஆதரவில் பித்ரு லோகத்தில் கர்மம் ஆகிறவரை தங்குகின்றனர். கர்மம் முடிந்த பின்பும் பூமியில் எந்த உடல் எடுத்தாலும் வஸு, ருத்ர, ஆதித்யர்களின் ஆதரவில் இருக்கின்றனர். சிரத்தையுடன் நாம் செய்யும் பித்ரு பூஜையில் வஸு, ருத்ர, ஆதித்ய, ஸ்வரூப, பித்ரு, பிதாமஹ, ப்ரபிதாமஹ என்கிறோம்.

பிரதி வருடம் பெற்றோர் இறந்த திதியில் செய்வது ப்ரத்யாப்திக (முதல் வருடம் ஆப்திகம்) பார்வண ஶ்ராத்தம். இறந்த பதினோராவது நாளில் செய்வது ஏகோதிஷ்டம் அவருக்கே பன்னிரெண்டாம் நாளில் செய்வது ஸபிண்டீகரணம் புண்ணிய தீர்த்தங்களுக்கோ க்ஷேத்ரங்களுக்கோ சென்றால் அங்கே செய்வது தீர்த்த ஶ்ராத்தம் கயையில் செய்வது கயா ஶ்ராத்தம் இங்ஙனம் பல ஶ்ராத்தங்கள் உள்ளன. இவைகளைப்பற்றி புராணங்களும் தர்ம சாஸ்திரங்களும் விரிவாக எடுத்துரைக்கின்றன.

நம்மைப்பெற்று வளர்த்து கல்வியூட்டி பொருளையும் தந்த மாதா பிதாக்களுக்கு சாஸ்திரங்கள் கூறியபடி சிரத்தையுடன் ஶ்ராத்தம் செய்யவேண்டும். ஶ்ராத்தம் நமது பித்ருக்களுக்கு மாத்திரமல்ல மற்றும் பலருக்கும் சந்தோஷம் அளிக்கின்றது.

ஹோமத்தால் தேவர்களும் ப்ராம்மண போஜனத்தால் ஸ்வர்க்க வாசிகளும் பிண்டதானத்தால் யமலோக வாசிகளும் உச்சிஷ்டத்தினால் பிசாசாதிகளும் விகிரான்னத்தால் நரக வாசிகளும் வாயச (காக) பிண்டத்தினால் நாம் அறியாத பித்ருக்களும் நன்மையடைகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஶ்ராத்தம் ஓர் உயர்ந்த வைதீக கர்மா. பித்ருதேவ ப்ரஸாதத்தால் சந்ததி, சம்பத், வம்சவிருத்தி, ஆரோக்கியம், ஞானம் முதலாம் பலவகையான பலனை நாம் அடையலாம்.

பித்ருக்களுக்கு சாபம்தான் ஆயுதம் பித்ரு சாபம் பெறாமல் அருள்பெற சிரத்தையுடன் கட்டாயம் ஶ்ராத்தம் செய்ய வேண்டும். அதனால் சகலவித ஸம்பத்துக்களையும் பெறலாம்.

வைத்யநாத தீக்ஷிதர் பல நூல்களை ஆராய்ந்து பல்லாண்டுகளுக்கு முன் ஶ்ராத்த காண்டம் என ஒரு நூல் அமைத்தார். அதில் பல நியமங்கள் கூறப்பட்டுள்ளன. ஶ்ராத்தத்தை செய்பவர்கள் செய்ய விரும்புபவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நியமங்களைச் செவ்வனே அறிந்து பொறுமையாக சிரத்தையுடன் செய்யும் வண்ணம் நமது ப்ராம்மண சமூகம் சிறப்புற்றுய்ய வேண்டுமென்னும் நோக்கத்துடன் அவர்கள் சமூகத்திற்குச் சமர்ப்பிக்கின்றேன்.

அறிஞர் பெருமக்களும் மெய்யன்பர்களும் குறை பொறுத்து குணங்கொண்டு பித்ருக்கள் அருளுக்குப் பாத்திரராகுக.

**மயிலணி** **பிரம்மஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள்**
**சுன்னாகம்**
14.08.2000

# சிரார்த்த நியமங்கள்

## ஶ்ராத்த நியமா:

001.கர்த்தா என்பவர் ஶ்ராத்தம் செய்பவர்.

002.போக்தா என்பவர் ஶ்ராத்தத்தில் வரித்துப் பூஜிப்பவர்.

003.கர்த்தா, போக்தா இருவர்க்கும் சில நியமங்கள் பொதுவாக உள்ளன.

004.இருவரும் ஶ்ராத்த தினத்தில் புஜித்த பின் வேறொன்றும் புஜிக்கலாகாது.

005.கர்த்தா ஶ்ராத்த பக்ஷம், ஒருவாரம் அல்லது மூன்று நாட்களாவது நியமமாயிருக்க.

006.பெற்றோர் இறந்த மாதம் பக்ஷம் திதியில் ஶ்ராத்தம் செய்க.

007.திதி இரு நாட்களும் இருந்தால் 18 நாழிகைக்கு மேல் (பகல் சுமார் ஒன்றரை மணி) அபரான்ன வியாப்தியில் ஶ்ராத்தம் செய்க.

008.ஒரு மாதத்தில் இரு திதிகள் வந்தால் பிந்திய திதியில் செய்க.

009.பஞ்சாங்கத்தில் வலது பக்கத்தில் ஒவ்வொரு மாதமும் ஶ்ராத்த திதிகள் குறிக்கப்பட்டிருக்கும்.

010.எக்காரணத்திலாவது திதியில் செய்ய முடியாவிடின் அன்று உபவாசம் இருந்து மறுநாள் செய்யலாம்.

011.திதி மறந்தால் கிருஷ்ண பக்ஷ அட்டமி, ஏகாதசி, அமாவாசையில் செய்க.

012.ஆசௌசம் வந்தால் ஆசௌச முடிவில் செய்க.

013.ஶ்ராத்தத்தில் தௌஹித்திரன், எள்ளு சிறந்தவை.

014.பெண் வயிற்றில் பிறந்த பிள்ளை தௌஹித்திரன்.

015.கறுப்பு எள்ளு நிறைய உபயோகிப்பது நலம். வராஹ மூர்த்தியினிடமிருந்து தர்ப்பம், கறுப்பு எள்ளு வந்தது. அவை இராக்ஷஸர்கள் கிட்டே வராமல் தடுக்கும். (தர்ப்பங்களை இடது கையால் எடுக்கக் கூடாது.)

016.அண்ணன், தம்பி இருவர்களை ஒரு ஶ்ராத்தத்தில் வரிக்கக் கூடாது.

017.பத்நி இல்லாவிடினும் புத்திரன் உள்ளவரை வரிக்கலாம்.

018.பஹிஷ்டைக்காரியின் (மனைவி வீட்டுக்கு விலக்காயிருக்கும் போது) புருஷன் அர்ஹரல்ல.

019.மூன்று நாட்களுக்குள் பிராம்மணார்த்தம் புஜித்தவரும் கூடாது.

020.வேதம் அறியாதவர், நோயாளி, என்னைச்சொல்லு எனக் கேட்பவரும் அர்ஹரல்ல.

021.நான் உன்வீட்டில் ப்ராம்மணனாக இருக்கிறேன். நீ என் வீட்டில் இரு என்று ஏற்பாடு செய்யக் கூடாது.

022.மூன்று மாதத்திற்கு மேற்பட்ட கர்ப்பிணிப்பதியும் கூடாது.

023.பெற்றோருக்கு ஆப்திகம் முடிக்காதவர், அன்று காலை வபனம் செய்து கொண்டவர் அர்ஹரல்லர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

024.கர்த்தா முதல்நாளும், ஶ்ராத்ததினத்திலும் பல் குச்சியை உபயோகித்து பல் தேய்க்கக் கூடாது.

025.இளையவரை பித்ருக்களாக வரிக்க வேண்டும். பெரியவரை விஶ்வேதேவராக வரிக்குக.

026.கர்த்தா புதுப்பூணூல் அணிந்து ஶ்ராத்தம் ஆரம்பிக்க வேண்டும்.

027.நாம் உடுத்துவது போல நல்ல வஸ்திரம் போக்தாக்களுக்கு கொடுக்க வேண்டும்.

028.ஒரு மாசத்திற்கு முன் பரான்னம் சாப்பிடக்கூடாது. ஒரு பக்ஷம் அல்லது ஒரு வாரமாவது குறைந்தது மூன்று நாளாவது பரான்னம்சாப்பிடாமல் இருக்க வேண்டும்.

029.ஒரு வாரம் முன்னே எண்ணெய் தேய்துக் கொள்ளக் கூடாது.

030.குரு, மாமன், சகோதரி, சகோதரர் அன்னம் பரான்னம் அல்ல.

031.சக்தி இல்லாதவர் பூணூலாவது போக்தாக்களுக்கு கொடுக்குக.

032.சக்திக்கேற்றபடி தக்ஷிணை கொடுக்குக.

033.ஶ்ராத்தம் சிரத்தையாகச் செய்ய வேண்டும். அவசரம் கோபம் கூடாது.

034.வரிக்கப்பட்டவர்களை தெய்வம் போல் நடத்துக.

035.அன்று காலை நனைத்து உலர்த்திய வஸ்திரத்தையே அணியவேண்டும்.

036.பாதப்ரக்ஷாளனம், ஸ்தல சுத்தியில், விஶ்வேதேவருக்கு சதுரச்ரம், பிதிர்களுக்கு வட்டமாகவும் இடம் செய்யவும்.

037.பவித்திரத்துடன் ப்ராம்மணர் காலை அலம்பக்கூடாது.

038.பவித்திரத்தை கழற்ற நேர்ந்தால் வலது காதில் வைக்குக.

039.இருவர்களது பாதஜலமும் ஒன்றாகச் சேரக் கூடாது.

040.பசுஞ்சாணியினால் ஸ்தலத்தை சுத்தி செய்க.

041.பிராம்மணர் கணுக்காலை மாத்திரம் அலம்புக. அதற்கு மேலும் உள்ளங் காலையும் அலம்பக் கூடாது.

042.ஹோமம் செய்து மிகுந்த நெய்யால் பிராம்மணர் காலை, பாத்ரத்தை, அன்னத்தை அபிகாரம் செய்யக் கூடாது.

043.பந்து அல்லாதவரோ வேலைக்காரியோ சமைக்கக் கூடாது.

044.வீட்டிற்கு விலக்கான ஸ்திரீ, மூன்றாம் நாள் ஸ்நானஞ் செய்த ஸ்திரீ சமைக்கக் கூடாது.

045.ஈரவஸ்திரத்துடன் சமைக்கக் கூடாது.

046.கர்ப்பிணியும், நோயாளியும் பாகம் செய்யக் கூடாது.

047.சிரித்துக் கொண்டோ, அழுது கொண்டோ, தலைமயிரை அவிழ்த்துக் கொண்டோ சமைக்காதே.

048.புதுப்பாத்திரம் அல்லது நன்கு சுத்தி செய்த பாத்திரத்தில் சமைக்க வேண்டும்.

049.இரும்புப் பாத்திரம் சம்மந்தப்படவே கூடாது.

050.மணி ஓசையும் திலகமும் ஶ்ராத்த காலத்தில் கூடாது.



051.இரும்பும் மணிச்சத்தமும் பிதிர்களை விரட்டும்.

052.அன்னத்தைக் கடைசியில் வடிக்கவேண்டும். இலையில் வைக்கும்போது புகை கிளம்பவேண்டும்.

053.வெள்ளிப் பாத்திரங்கள் சிலாக்கியமானவை.

054.வாழையிலை அடி, நுனி நறுக்கக்கூடாது. அதன் நரம்பையும் கிழிக்கக்கூடாது. இடது புறம் நுனி அமைந்திருக்கவேண்டும்.

055.ஶ்ராத்தத்திற்கு ஏற்றவைகள்:-

உளுந்து, கறுப்பு எள்ளு, கோதுமை, பயறு, பாகற்காய், பலாக்காய், மாங்காய், மாதுளம் பழம், கறிவேப்பிலை, எலுமிச்சம்பழம், வாழைப்பழம், மாம்பழம், திராட்சை, வாழைக்காய், புடலங்காய், கண்டங்கத்தரி, சுண்டங்காய், மிளகு, நெய், பழுப்புச்சர்க்கரை, வெல்லம், கடல் உப்பு, நெல்லிக்காய், இலந்தைப்பழம், தேன், பசும்பால், பசுந்தயிர், கரணைக்கிழங்கு, சேப்பங் கிழங்கு, சீரகம், ஏலக்காய், அவரைக்காய்,
தூதுவளை, வாழைத்தண்டு, தேங்காய், கடுகு, வள்ளிக்கிழங்கு, கடலை, விளாம்பழம், மிளகாய், நெல்லரிசி, நல்லெண்ணெய், மஞ்சள், புளி, இளநீர் சிறுகிழங்கு, இஞ்சி, கீரை, கீரைத்தண்டு, வெற்றிலை பாக்கு, ஏலம், சுக்கு, கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி ஆகியவைகள் சேர்க்கலாம்.

056.சேர்க்கக்கூடாத பொருட்கள்:-

காராமணி, கொள்ளு, பெருங்காயம், முருங்கைக்காய், துவரம்பருப்பு, சுரக்காய், வாழைப்பூ, முள்ளங்கி, வெங்காயம், வெள்ளைப்பூண்டு, எருமைப்பால், ஆட்டுப்பால், எருமைத்தயிர், எருமைநெய் இவைகளை விலக்குக.

057.முக்கியமானவைகளும் சிலாக்கியமானவைகளும்:-

தேன், பலா, உளுந்து, கண்டங்கத்தரி, சுண்டங்காய், முல்லையிலை, பிரண்டை, முசுட்டையிலை, காரையிலை, துளசி.

058.மாத்யான்ஹிக காலத்தில் கர்த்தா மாத்யான்ஹிகம் செய்து விட்டு ப்ராம்மணர்களை அழைத்து மனஶுத்திக்காக எள்ளுருண்டை (க்ருஸரம்) முகஶுத்திக்காக தாம்பூலம் சரீரஶுத்திக்காக எண்ணெயும் கொடுத்து அவர்களை ஸ்நானஞ்செய்யும்படி செய்து தானும் ஸ்நானம் செய்து ஶ்ராத்தத்தை ஆரம்பிக்க வேண்டும்.

059.பார்வண ஶ்ராத்தம் என்பது விஶ்வே தேவர்களையும் பித்ரு மாத்ரு வர்க்கத்தில் மூன்று மூன்று பேர்களையும் சேர்த்துச் செய்வது.

060.ஒருவரை - இறந்து ப்ரேதரூபியாக இருப்பவரை மாத்திரம் உத்தேசித்து செய்வது ஏகோத்திஷ்டம்
சபிண்டீகரணத்தில் இரண்டும் உண்டு.

061.ஆப்திக, பிரத்யாப்திக ஶ்ராத்தங்களில் பார்வண ஶ்ராத்த விதிப்படி செய்ய யோக்யதை தாருங்கள் என ஶ்ராத்த ஆரம்பத்தில் அநுக்ஞை பெறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

062.எட்டு வஸுக்கள் பதினொரு ருத்திரர்கள் பன்னிரெண்டு ஆதித்யர்கள் பன்னிரெண்டு விஶ்வே தேவர்கள் ஶ்ராத்தத்தை காக்க நியமிக்கப்பட்டவர்கள்.

063.ஒவ்வொரு ஶ்ராத்தத்திலும் இரண்டு விஶ்வே தேவர்களை வரிக்க வேண்டும்.

064.ஆப்திக, ப்ரத்யாப்திகத்தில், புரூர்வார்தவ ஸம்க்ஞக விஶ்வே தேவர் எனப்படுவர்.

065.மஹாளய ஶ்ராத்தத்தில் துரு-ருசி ஸம்க்ஞகர் எனப்படுவர்.

066.சபிண்டீகரணத்தில் கால-காமுக ஸம்க்ஞகர் எனப்படுவர்.

067.ஸன்யா ஸாங்க ஶ்ராத்தத்தில் ஸாது-குரு ஸம்க்ஞகர் எனப்படுவர்.

068.நாந்தியில் ஸத்யவஸு ஸம்க்ஞகர், யாகத்தில் க்ர்து-தக்ஷ ஸம்ஞகர் எனப்படுவர்.

069.வஸு, ருத்ர, ஆதித்யர், ஶ்ராத்த தேவர்கள் அவர்களுக்கும் சேர்த்துச் செய்வதால் நமது பித்ருக்களுக்கு அளவில்லாத திருப்தி.

070.வஸு ஸ்வரூபர் பிதா, ருத்ர ஸ்வரூபர் பிதாமஹர், ஆதித்ய ஸ்வரூபர் ப்ரபிதாமஹர் இவர்களைச் சேர்த்து வஸு ருத்ராதிய ஸ்வரூப அஸ்மத் பித்ரு, பிதாமஹ, ப்ரபிதாமஹர் என்கிறோம்.

071.தேவவரணம் உப வீதியாகச் செய்ய வேண்டும்.

072.பித்ருவரணம் ப்ராசீனா வீதியாகச் செய்ய வேண்டும்.

073.தேவர்களுக்கு நேரான தர்ப்பம் அளிக்க வேண்டும்.

074.பித்ருக்களுக்கு நுனியும் அடியும் சேர்த்து இரண்டாக மடித்து அளிக்க வேண்டும்.

075.ப்ராம்மணர்களது பாதப்ரக்ஷாளனத்தில் (கால் அலம்புதல்) தேவர்கள், பித்ருக்கள் அவரவர் உலகங்களிலிருந்து வருவதால், ப்ராம்மணர்கள் கால் அலம்பும் இடத்திற்கே ஆசனம், தர்ப்பம், கந்தம், அக்ஷதை, எள்ளு முதலியவைகளால் முதலில் பூஜை செய்ய வேண்டும்.

076.விஶ்வே தேவரை அக்ஷதையால் ஆவாஹனம் செய்யும் போது அவரது வலது காலில் ஆரம்பித்து ப்ரதக்ஷிணமாக அக்ஷதையைப் போட வேண்டும்.

077.பிதிர்களை எள்ளினால் ஆவாஹனம் செய்யும் போது அவரது தலையில் தொடங்கி கால்வரை எள்ளைப் போட வேண்டும்.

078.அர்க்ய க்ரஹணம் - அக்கினிக்குத் தெற்கில் விஶ்வே தேவருக்கும் ஸ்ரீ மஹா விஷ்ணுவிற்கும் ஒரு பாத்திரத்தில் தீர்த்தத்தைக் கிரஹிக்க வேண்டும்.

079.பிதிர்களுக்கு வேறோர் பாத்திரத்தில் தீர்த்தத்தை கிரஹிக்க வேண்டும்.

080.அர்க்கிய பாத்திரங்களைத் திறந்து வைக்கக் கூடாது அவற்றை இடம் விட்டு நகர்த்தவும் கூடாது.

081.அர்க்கியமெல்லாம் அடியோடு கொட்டி விட்டால் முன்போல மந்திரம் கூறி புதிதாக வைக்க வேண்டும். கொஞ்சம் சிந்தினால் பாதகமில்லை.



082.ஶ்ராத்த ப்ராம்மணர் ஒருவரை ஒருவர் தொடக் கூடாது.

083.ஶ்ராத்த ப்ராம்மணர்கள் ஒருவருக்கொருவர் இலையில் எச்சில் விழுந்து விட்டால் உடனே கை இலைமீது படக்கூடாது. அவர்கள் எழுந்திருக்கக் கூடாது. இரு இலைகளையும் எடுத்து விட்டு கோமயத்தால் சுத்தி செய்துவிட்டு வேறு இலைபோட்டு பரிமாறவேண்டும். மறுபடி பரிசேஷனம் செய்து சாப்பிடலாம்.

084.ப்ராம்மணர் போஜனம் முடியும்வரை அக்நி அவியக்கூடாது.

085.அக்நி அவிந்தால் உபவாசம் இருந்து மறுபடியும் ஶ்ராத்தம் செய்ய வேண்டும்.

086.ராக்ஷஸர் முதலியவர்களை அகற்றுவதற்காக ப்ராம்மணர் சாப்பிடும் போது அபிஶ்ரவணம் சொல்லும்படி செய்ய வேண்டும். வேத மந்த்ரங்ளை அத்தியனஞ் செய்யும்படி கூற வேண்டும். அவர்கட்கு ஶ்ராத்தமான பின்பு தக்ஷிணை கொடுக்க வேண்டும்.

087.ஏகோத்திஷ்டம், சபிண்டீகரணம், மாசிகம், அநுமாசிகம், நாந்தி, கயாஶ்ராத்தம் இவைகளில் அபிஶ்ரவணம் கூடாது.

088.ஶ்ராத்த ப்ராம்மணர் பேசவும் கூடாது. மௌனமாகப் புஜிக்க வேண்டும். வேண்டியதை விரலால் தொட்டுக் காட்ட வேண்டும். இரவு பசி எடுக்காதபடி அவசரமின்றி நன்றாகப் புஜிக்க வேண்டும்.

089.ப்ராம்மணர் சாப்பிட்ட எச்சில் இலையை பூமியில் புதைக்க வேண்டும்.

090.நகரங்களில் வசதியில்லாத இடத்தில் சிலர் பசுவுக்கு அந்த இலையை அளிக்கின்றனர். கோவுக்கு எச்சிலைக் கொடுக்கக்கூடாதென விதி. வேறு வகையில்லாததால் வழக்கப்படி செய்க.

091.இலையை ஸ்வஸ்தி வாசனத்திற்கு முன் எடுக்க வேண்டும்.

092.பிண்டப்ரதானமான பின்பு சுத்தி செய்ய வேண்டும்.

093.ப்ராம்மணர்களது இலையின் முன் அவர்கள் சாப்பிட்டு முடிவடைந்ததன் பின்பு விகிரான்னம் வைக்க வேண்டும். இ∴து நரக வாசிகளுக்கு இன்பத்தை அளிக்கும்.

094.ஶ்ராத்தம் நமது பித்ருக்களுக்கு மாத்திரமல்ல மற்றும் பலருக்கு சந்தோஷம் அளிக்கின்றது. ஹோமத்தால் தேவர்களுக்கு சந்தோஷம் ப்ராம்மண போஜனம் ஸ்வர்க்க வாசிகளுக்கு இன்பம் அளிக்கின்றது. பிண்டதானம் எமலோக வாசிகளுக்கு இன்பம். அன்னதானம் மனுஷ்ய வாசிகளுக்கு இன்பம். உச்சிஷ்டம் பிசாசாதிகளுக்கு இன்பம்.

095.எனது குலத்தில் பிறந்து அக்நியால் தஹிக்கப்பட்டவர்களும், தஹிக்கப்படாதவர்களுமான பிதிர்கள் பூமியில் வைக்கப்பட்ட இந்த வாயச (காக) பிண்டத்தால் சந்தோஷமடைந்து சிறந்த கதியை அடையட்டும். விதிப்படி அக்நியில் எரிந்தவர், விதிப்படியான அக்நியின்றி எரிந்தவர், நமது குலத்தில் பிறந்து இறந்தவர்கட்கு, இந்தப் பிண்டம் சந்தோஷமளிக்கும் அன்னமாகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

096.காக பிண்டம் நாமறியாத பிதிர்களுக்கு காக பிண்டத்தை காகம் எடுக்கும் வரை ரக்ஷி.

097.பிண்டப்பிரதானமானபின் சிறிது அன்னத்தை மந்திரம் கூறி வாயில் போட்டுக் கொள்க. அது ஶ்ராத்தாங்கமானதால் சாப்பிட்ட தோஷம் இல்லை. சிலர்சம்பிரதாயம் அதை முகர்ந்து பார்ப்பது. கர்த்தா, ஏகாதசியானால் கூட, பித்ருசேஷம் சாப்பிடலாம். ஏகாதசி விரதமிருந்தது போலவேயாகும். ஞாதிகள் அன்று சேஷத்தை முகர்ந்தால் போதும் சாப்பிட்ட பலனும் வரும். உபவாசம் இருக்கலாம். விவாஹமானாலும் பெண்கள் பிதா, மாதா, ப்ராதா இவர்களது பித்ருசேஷம் சாப்பிடலாம் தோஷமில்லை. விதவைகளானால் அதைச்சாப்பிடக் கூடாது.

098.பழம், கறிகாய், பால், தயிர், நெய், தேன் இவை சேஷமில்லை.

099.ஏகோதிஷ்டத்தில் ஞாதிகளும் சாப்பிடக் கூடாது.

100.மூன்று நாள் தீட்டுள்ள ஞாதி பித்ரு சேஷம் சாப்பிடக் கூடாது.

101.ஶ்ராத்தத்திற்கு மறுநாள்தான் பரேஹணி தர்ப்பணம் செய்ய வேண்டும். வசதியில்லாதவிடத்து ஶ்ராத்த முடிவிலாவது அன்றைக்கே செய்க. சபிண்டீகரணம், மாசிகம், நாந்தி, ஆப்தீகம் இவைகளில் பரேஹணி தர்ப்பணமில்லை.

102.பிதா இருந்து மாதா ஶ்ராத்தமானால் தர்ப்பணமில்லை.

103.ஶ்ராத்த சேஷமான தில, தர்ப்பங்களால் அந்தத்தர்ப்பணம் காலையில் பிராம்ம முகூர்த்தத்தில் செய்க. தர்ப்பணம் செய்த பிறகே ஸ்நானஞ் செய்ய வேண்டும். ஸந்த்யாகாலம் அல்லது உதயமாகிவிட்டால் ஸ்நானம், ஸந்த்யை, பிறகுதான் தர்ப்பணம்.

104.பங்கு பிரித்த சகோதரர் தனித்தனி ஶ்ராத்தம் செய்க.

105.தாயார் இருந்தால் எல்லோரும் ஒன்று சேர்ந்து செய்யலாம்.

106.தனித்தனி புத்திரர் செய்தால் பிதிர்களுக்கு சந்தோஷம்.

107.ஸ்திரீகளுக்காகச் செய்யும் ஶ்ராத்தத்தில் கூட ஸ்திரீகளுக்கு ஹோமம் கிடையாது. வரணமும் பிண்டமும் மாத்திரம் தான் உண்டு.

108.அமாவாசை தர்ப்பணத்தில் வரணமில்லை. தர்ப்பணமுண்டு.

109.தந்தை உள்ளவன் ப்ரும்மயக்ஞத்தில் பிதிர் தர்ப்பணம் செய்ய வேண்டும். இ∴து தேவஸ்வருபிகளாக இருக்கும் சில பித்ருக்களை நாடி செய்யப்படுவது. இப் பித்ரு தேவர்களை நாடி தாய், தந்தை உள்ளவர்கள் கூட அவசியம் தர்ப்பணம் செய்யவேண்டுமென சாஸ்திரம் சொல்கிறது.

110.ஆள்காட்டி விரலாலும் கட்டை விரலாலும் எள்ளை எடுக்கக் கூடாது. அது ராக்ஷஸம்.

111.ஞாயிறு, செவ்வாய், வெள்ளிகளில் தர்ப்பணம் செய்தால் எள்ளுடன் அக்ஷதை கலந்து செய்ய வேண்டும்.



112.மஹாளய பக்ஷத்தில் ஶ்ராத்தம் செய்வது அவசியம். ஹிரண்யமாகவாவது செய்க.

113.மஹாளய பக்ஷத்தில் தினமும் தர்ப்பணமாவது செய்யவேண்டும்.

114.மஹாளய பக்ஷத்தில், மஹாபரணி, மத்யாஷ்டமி, வியதீபாதம் விசேஷம் மஹாளய பக்ஷ திரயோதசி கஜச்சாகையாகும். இவற்றில் செய்தால் கயா ஶ்ராத்த பலன் உண்டு.

115.சந்யாசிகளுக்கு துவாதசியிலும், சதுர்த்தசியில் துர்மரணமானவர்களுக்கும் ஶ்ராத்தம்.

116.மஹாளயத்தில் தான் காருண்ய பித்ருக்களுக்கு வரணம், பிண்டம், தர்ப்பணம் உண்டு. சிறிய, பெரிய தகப்பன், தனது அண்ணன், தம்பி, அத்தை, அம்மான், பெரிய, சிறிய தாயார், சகோதரிகள், அவர் புத்திரர்கள், பத்நி, மாமனார், மாமியார், அத்திம்பேர், மாட்டுப்பெண், மைத்துனன், குரு, யஜமானன், நண்பன் ஆகியவர்கள் காருண்ய பித்ருக்கள் எனப்படுவர்.

117.மஹாளயத்தில் தாய் இருந்தால் மாத்ரு வர்க்க வரணம் இல்லை.

118.ஆப்திக, ப்ரத்யாப்திக ஶ்ராத்தங்களில் ஆறு பிண்டங்கள் அளிக்கிறோம்.

119.மஹாளய ஶ்ராத்தத்தில் பிதிர் வர்க்கம், மாத்ரு வர்க்கம், ஸபதநீக மாதாமஹ வர்க்கம், காருண்ய பித்ருக்களுக்குமாக பதின்மூன்று பிண்டங்கள் வைக்க வேண்டும்.

120.கர்ப்பா தானம், பும்ஸவன ஸீமந்தம், ஜாதகர்ம நாமகரணம், அன்னப்பிராசனம், சௌளம், உபநயனம், ப்ரஜாபத்யாதி விரதங்கள், ஸமாவர்த்தனம், விவாஹம், புதுவீடு க்ரஹப்பிரவேசம் இவைகளில் நாந்தி ஶ்ராத்தம் உண்டு.

121.நாந்தியில் மாத்ருவரணம் முதலில் வரிக்க வேண்டும் பிறகுதான் பித்ரு வர்க்கம் வரிக்க வேண்டும்.

122.நாந்தியில் பிரபிதாமஹன், பிதாமஹன், பிதா என்ற முறையில் வரிக்க வேண்டும்.

123.மங்கள கரமானது நாந்தி ஶ்ராத்தம் என்பது. எள்ளுக்குப்பதிலாக யவதான்யம் பயன்படுத்தப்படும். அப்ரதக்ஷிணமாக பரிசேஷனம் இல்லை. ஸ்வதா என்ற சப்தம் கூட இல்லை.

124.விஸ்வே தேவருக்காக இரு ப்ராம்மணர் இப்படியே ஒவ்வொரு பிதிர் வர்க்கங்கட்கும் இவ்விரு ப்ராம்மணர்களை வரிக்க வேண்டும்.

125.ஒரு நாந்தி ஶ்ராத்தம் செய்த பின் கர்த்தா மற்றொரு நாந்தி செய்ய நேர்ந்தால் ஆறுநாள் கழித்த பின்பே இரண்டாவது நாந்தி ஶ்ராத்தம் செய்ய வேண்டும்.

126.நாந்தி செய்தவர் மூன்று மாதம் வரை அமாவாசை, ஸங்க்ரமணம், மன்வாதி, யுகாதி ஆகியவைகளில் அன்னஶ்ராத்தம் செய்யக்கூடாது. தர்ப்பணம் செய்யக் கூடாது என சிலர் ஆறு மாசம் தர்ச தர்ப்பணம் செய்வதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

127.நாந்தி செய்தவர் எள்ளு, தர்ப்பங்களைத் தொடக் கூடாது. அக்ஷதை, அறுகம் புற்களால் தர்ப்பணம் செய்யலாம்.
128.நாந்தி செய்தவர் சபிண்டீகரணம், ப்ரத்யாப்திகம் முதலியவைகளை வீட்டில் செய்யலாம்.
129.பத்நி ரஜஸ்வலையாக இருந்தால் நாந்தி ஶ்ராத்தம் செய்யக் கூடாது.
130.நாந்தியில் கிழக்கு முகமாக அமர்ந்து கிழக்கு நுனியாக தர்ப்பங்களில் இரண்டு, இரண்டு பிண்டங்கள் வைக்கவும். இலந்தைப்பழம், தயிர் இவைகளால்தான் பிண்டம்.
131.வசதியற்றவர் ஆமஶ்ராத்தமாக அல்லது ஹிரண்யஶ்ராத்தமாகவும் செய்யலாம் தற்போது ஹிரண்யமாகச் செய்வதே வழக்கில் இருந்து வருகின்றது.
132.சங்கல்ப ஶ்ராத்தத்தில்-ஆவாஹனம், ஹோமம், அர்க்கியம், விகிரம், பிண்டதானம், தர்ப்பணம் இவைகள் இல்லை.
133.எல்லா உபசாரமும் விஸ்வே தேவருக்கே முதலில் செய்ய வேண்டும்.
134.ஶ்ராத்தம் முடிந்து எழுந்திருப்பது பித்ருக்களுக்குத்தான் முதலில் நடைபெறவேண்டும்.
135.மாதா (தாயார்) ஶ்ராத்தத்தில்-மாதா, பிதாமஹி, பிரபிதாமஹி அவர்களை வரிக்குக. அவர்களுக்கே அர்க்கிய கிரஹணம், ஹோமம் அவர்களின் புருஷ பிதிர்களுக்கே.
136.சகோதரி, தம்பி, புத்திரன், மாதுலன், ஆசாரியன் முதலியவர்கட்கு ஶ்ராத்தம் செய்ய வேண்டியிருந்தால் ஊமிநூயெ, ஹூாதூயெ என்றிப்படி அவரவரை மாத்திரம் வஸுரூபமாக வரித்து சங்கல்ப ஶ்ராத்தமாக செய்க.
137.பிதா மாதாக்களின் ஶ்ராத்தத்தை பார்வணவிதானமின்றிச் சங்கல்ப ஶ்ராத்தமாகச் செய்யக் கூடாது.
138.சிறிய தந்தையினதும் பெரிய தநிதையினதும் ஶ்ராத்தத்தில் அவர்களையும் பிதாமஹ ப்ரபிதாமஹர்களையும் வரிக்குக. தமையனுடைய ஶ்ராத்தத்தில்-தமையன், பிதா, பிதாமஹர் என்பவர்களை வரிக்குக. மதாமஹருடைய ஶ்ராத்தத்தில்-மாதாமஹருடன் மாதாவின் பிதாமஹரையும், மாதாவின் ப்ரபிதாமஹரையும் வரிக்குக.
139.ஆபத்துக் காலங்களிலும், ஔபாஸனாக்நி விச்சின்னமாய் பத்நிரஜஸ்லையாயிருத்தல் முதலிய காரணங்களால் அக்நி ஸந்தானஞ் செய்ய இயலாத போதும், அன்னஶ்ராத்தம் செய்வதற்கு அவகாசக் குறைவான போதும் ஆம ஶ்ராத்தமாக அல்லது ஹிரண்ய ஶ்ராத்தமாக செய்தல் வேண்டும்.
140.மாதா மாதம் வரும் அமாவாசையில் செய்வது ஊரு ஶூாஃலம் இதற்கு அங்கமாகவே ஊரு ஊவுணம் சொல்லப்பட்டிருக்கிறது. பித்ருவர்க்கத்திற்கும் மாதாமஹ வர்க்கத்திற்கும் ஶூாஃலம் தர்ப்பணங்களைச் செய்ய வேண்டும். ஶ்ராத்தத்தை ஹிரண்யரூபமாகச் செய்யலாம். எனினும் தர்ப்பணமே வழக்கில் இருந்து வருகிறது.



தற்காலம் நமது ப்ராம்மண சமூகத்தில் தாய்தந்தையருடைய ப்ரத்யாப்திக ஶ்ராத்தம் செய்பவர்கள் மிகவும் அருகி வருகின்றனர். பலர் ஆப்திகத்துடன் தம் கடமை முடிந்ததாக எண்ணுகின்றனர். சிரத்தையின்மையே காரணம் நாம் இவற்றை சிரத்தையுடன் செய்தால் தான் நம்மைப் பார்த்து நம் பிள்ளைகளும் பிற்காலத்தில் செய்வார்கள். பிதிர்களுக்கு சாபம்தான் ஆயுதம். பிதிர்சாபத்தினால் நமக்கோர் குழந்தை இல்லையே என்று மனம் வருந்தி பல தம்பதிகள் ஸ்தலயாத்திரை புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம், விரதங்கள் எனப்பலவற்றை அனுஷ்டித்து வருவதைப் பார்க்கிறோம்.

ஆதலினால் அன்பர்கள் இவற்றையெல்லாம் சிந்தித்து செயலாற்றுவார்கள் எனும் நம்பிக்கையுடன் நிறைவு செய்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org